# டிஜிட்டல் ஈடுபாடு

கதை மற்றும் வடிவமைப்பு: பூர்னிமா மீகம்மன

கலை நிபுணர்: சுகப்ரதா சோமஸ்கந்த ஐயர்

# டிஜிட்டல் ஈடுபாடு (Digital Activism)

**அறிமுகம்**

ஈடுபாடு என்பது பிரச்சினைகளை சமூக அரசியல் மாற்றங்களை கொண்டுவரும் நோக்குடன் அமைதியான முறையில் அணுகுதலாகும். எதிர்பார்க்கப்பட்ட மாற்றமானது சமூக, தேசிய அல்லது சர்வதேச ரீதியானதாக அமையலாம்.

டிஜிட்டல் ஈடுபாடு அல்லது இணைய ஈடுபாடு என்பது இணையத்தினை விழிப்புணர்வுச் செயன்முறைக்காக பயன்படுத்துவதாகும்.




கிரீச்!


அரசாங்கம் கவனிக்கிறதில்ல
எங்கட மனுக்களுக்கும் பதில் ஒன்னும் இல்ல.
இப்போ ஒரு வருஷம் ஆகிடுச்சு
இன்னும் பாலத்தை கட்டல
அடுத்த தேர்தல்ல என்னோட வாக்கு இந்த அரசாங்கத்துக்கு இல்ல.
நமக்கு ஒன்னும் செய்ய முடியாதா?
நாம இத வச்சு ஒரு வீடியோ பண்ணுவோம்.
அது தான் சரி.
நாம இத சமூக வலைத்தளத்துல போடுவோம்.


REC
வெள்ளம் காரணமாக பாலம் உடைந்து ஒரு வருடம் கடந்துவிட்டது. அரசாங்கம் கவலைப்படுவதாகத் தெரியவில்லை. #fixthebridge
இந்த செய்தி தீயாய் பரவியது.
வெள்ளம் காரணமாக பாலம் உடைந்து ஒரு வருடம் கடந்துவிட்டது. அரசாங்கம் கவலைப்படுவதாகத் தெரியவில்லை.
#fixthebridge
Share


24000
பகிர்வுகள்!!!
எனக்கு ஆதரவு குறையுது.
மறு தேர்தலுக்கு எனக்கு
இந்த மக்கள் தேவை.
பாலத்தை
திருத்துங்க.


சமூகத்தில் உள்ள பிரச்சனைகள் குறித்து கவனத்தை ஈர்க்கவும், உங்கள் சமூகத்தின் பிரச்சனைகளுக்கு தீர்வு காண பிரச்சாரம் செய்யவும் உங்கள் கையடக்கத்தொலைபேசி மற்றும் இணையதளத்தை பயன்படுத்தலாம்.

# கற்றுக் கொண்ட பாடங்கள்

வெற்றிகரமான இணைய செயற்பாட்டாளர்களால் பின்பற்றப்பட்ட சில தந்திரோபாயங்கள் சில கீழ்வருமாறு.

**இணையத்தின் மூலமான மனுக்கள்**:

சரியான பதில் வழங்கப்பட்டால் இது ஒரு பெரிய கருவியாகும். சில மனுக்கள் ஆயிரக் கணக்கானோரால் கையொப்பமிடப்பட்டவையாகும். இவற்றை அரசாங்கத்தினாலோ அல்லது பெரிய கம்பனிகளாலோ இலகுவாக உதாசீனப் படுத்த முடியாது.

**Hashtags:**

ஒரு சிறந்த hashtag ஆனது Twitter, Instagram, Facebook, Reddit மற்றும் Youtube இல் மக்களால் சரியான செய்தியைப் பெற்றுக் கொள்ளவும் பகிரப்படும் தகவலினைத் தீர்ப்பதாகவும் அமையும்.